# கட்டிட திட்ட வரைபு அபிவிருத்தி அனுமதி பத்திரங்கள் வழங்குதல்

ஒரு உள்ளூராட்சிமன்றத்தின் எல்லைக்குள் நிர்மாணிக்கப்படுகின்ற அனைத்து நிர்மாண பணிகளும் அந்த உள்ளூராட்சிமன்றத்தினால் வழங்கப்படுகின்ற அனுமதி பத்திரத்துக்கு அமையவே இடம்பெற வேண்டும்.

அனுமதி பத்திரத்தை எவ்வாறு பெற வேண்டும்?

**01**

முதலில் விண்ணப்பப்படிவத்தினை பெற்றுக் கொள்ளுங்கள்.

அதை உள்ளூராட்சி சேவை கருமபீடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோல மன்றத்தின் இணையத்தளம் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

**02**

இந்த விண்ணப்பத்தை தெளிவாகவும் சரியான முறையிலும் பூர்த்தி செய்ய வேண்டும்.

**03**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை தேவையான ஆவணங்களோடு சேவை கருமபீடத்தில் ஒப்படையுங்கள்.

**04**

அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளுங்கள்.

**05**

அதன் பின் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக்கொண்டது தொடர்பாகவும் அதன் பதிவு இலக்கம், இடத்தை பார்வையிட வரும் திகதி விண்ணப்பத்தை பெற்றுக்கொண்ட அதிகாரியால் அப்பொழுதே உங்களுக்கு தெரிவிப்பார்.

**06**

உங்களின் விண்ணப்பம் அந்த சந்தர்ப்பத்திலேயே சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்பப்படுவதோடு, அவர் அதைப் பெற்ற உடனே களப்பரிசோனைக்கு வரும் திகதியினை உங்களுக்கு அறிவிப்பார்.

**07**

தீர்மானிக்கப்பட்ட தினத்தில் சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் அந்தக் களத்தை பார்வையிட வருவதோடு, உங்களின் கோரிக்கை தொடர்பான கண்காணிப்பு மற்றும் பரிந்துரை கடித கோப்புகளை அவரால் இடத்தை பார்வையிட்ட தினத்திலேயே திட்டக்குழுவுக்கு முன்வைப்பதற்காக சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரிக்கு ஒப்படைப்பார்.

**08**

தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையோடு, கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, அதை அங்கிகரிக்கப்பட்டு திட்டமிட்ட தினத்தில் திட்டமிடல் குழு சந்திப்பின்போது மேற்கொள்ளப்படும்.

**09**

அதன்பின் அதற்கு சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரியால் திட்டமிடல்குழு சந்தித்த தினத்தில் இருந்து இரண்டு நாட்களுக்குள் அபிவிருத்தி அனுமதி பத்திரத்தை தயாரித்து அதிகாரமுடைய அதிகாரியின் கையொப்பத்தை பெற்றுக்கொண்டு அதை சேவை கருமபீடத்தில் ஒப்படைப்பார்.

**10**

சேவை கருமபீட அதிகாரிகளால் தபால் அல்லது அப்பொழுதே அபிவிருத்தி அனுமதி பத்திரத்தையும் அனுமதித்த திட்டத்தை விண்ணப்பதாரிக்கு ஒப்படைப்பார்கள்.

**11**

சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரியால் உங்களின் திட்டத்தை அனுமதிக்காமல் நிராகரித்திருந்தால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைய பூர்த்தி செய்ய வேண்டியவற்றை பூர்த்தி செய்து மீண்டும் ஒப்படைக்க முடியும்.

**12**

திட்டமிடல் குழுவால் உங்களின் கட்டிட திட்டத்திற்கு அனுமதி வழங்காவிட்டால் உங்களுக்கு அமைச்சரிடம் மேல்முறையீடு செய்ய முடியும்.

அனுமதி பத்திரத்தின் செல்லுபடி காலம் ஒரு வருடமாகும். அதன் செல்லுபடி காலத்தை மேலும் இரண்டு சந்தர்பங்களில் ஒவ்வொரு வருடமாக நீடித்துக்கொள்ள முடியும்.
மூன்று வருட காலத்துக்குள் நிர்மாண பணிகளை மேற்கொள்ள முடியாமல் போகும் சந்தர்ப்பங்களில் மீண்டும் விண்ணப்பம் ஒன்றை முன்வைத்து அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

திட்டப் பரிந்துரைக்கு முரணான மேற்கொள்ளும் கட்டுமானங்கள் சட்ட விரோதமானக் கட்டுமானமாக கருதப்படுவதோடு அவற்றை இடித்து அகற்ற அல்லது வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.



Funded by European Union

UNDP

STRIDE CDLG Capacity Development of Local Governments